# வடமேல் மாகாண இயந்திரோபகரண அதிகார சபையில் பதவி வெற்றிடங்களுக்கு பணியாளர்களை ஆட்சேர்த்தல்

வடமேல் மாகாண இயந்திரோபகரண அதிகார சபையில் வெற்றிடமாக உள்ள முகாமைத்துவப் பணிப்பாளர், இயந்திரவியல் பொறியியலாளர், இயந்திரவியல் அத்தியட்சகர், தொழில்நுட்ப உதவியாளர், பொறிமுறையாளர், தகரவேலையாளர், நிறப்பூச்சு பூசுநர், உருக்கியொட்டுநர், கனரக இயந்திர இயக்குநர், கனரக வாகன சாரதி பதவிகளுக்காக பின்வரும் தகைமையைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. முகாமைத்துவப் பணிப்பாளர் பதவி (நிரந்தரம்) - வெற்றிட எண்ணிக்கை 01**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்:**

i. **கல்வித் தகைமைகள்**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இயந்திரப் பொறியியல் தொடர்பில் ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

  மற்றும்

- இலங்கை பொறியியல் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

ii. **அனுபவம்**

- பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச அல்லது அரச நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருடகாலம் பொறியியல் சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

iii. **உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்:**

- ''முகாமைத்துவ'' சேவை வகுதியில் 1ஆம் தரத்தில் குறைந்தபட்சம் 05 வருடகாலம் விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

iv. **வயது:**

- 40-55 வயதுக்கிடையில் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

v. **பதவிக்குரித்தான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்:**

- HM 1-1-2025: 140,640-15x4,100-202,140 சம்பள அளவில் 2026ஆம் வருடத்திற்கு இயைபான ஆரம்ப சம்பளம் + தொழில்சார் கொடுப்பனவுகள் + போக்குவரத்து கொடுப்பனவு + எரிபொருள் கொடுப்பனவு + வாழ்க்கைச் செலவுப் படி + ஊக்குவிப்புக் கொடுப்பனவு

**02. இயந்திரவியல் பொறியியலாளர் பதவி (நிரந்தரம்) - வெற்றிட எண்ணிக்கை 01**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்:**

i. **கல்வித் தகைமைகள்**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொறியியல் (இயந்திரவியல்) தொடர்பில் ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

  மற்றும்

ii. **அனுபவம்**

- பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் இயந்திரப் பொறியியல் துறையில் 03 வருட காலம் அனுபவம் அல்லது இலங்கை பொறியியல் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

iii. **உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்:**

- குறித்த பதவிக்காக ஒப்படைக்கப்படும் விடயத் துறைக்கு இயைபாக கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியில் 1ஆம் தரத்தில் 05 வருடகாலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

iv. **வயது:**

- 22 - 45 வயதுக்கிடையில் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

v. **பதவிக்குரித்தான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்:**

- MM 1-3 – 2025: 96,650-10x2,480-15x3,450-173,200 சம்பள அளவில் 2026ஆம் வருடத்திற்கு இயைபான ஆரம்ப சம்பளம் + தொழில்சார் கொடுப்பனவுகள் + வாழ்க்கைச் செலவுப் படி + ஊக்குவிப்புக் கொடுப்பனவு

**03. இயந்திரவியல் அத்தியட்சகர் (நிரந்தரம்) - வெற்றிட எண்ணிக்கை 01**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்:**

i. **கல்வித் தகைமைகள்**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கபட்ட பல்கலைக்கழகத்தில் பொறியியல் (இயந்திரவியல்) தொடர்பில் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

  **மற்றும்**

ii. **அனுபவம்**

- பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபையொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் வர்த்தக நிறுவனமொன்றில் ஒரு வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

iii. **உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்:**

- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிநுட்பப் பயிற்சி நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட தேசிய தொழில்நுட்பவியல் பட்டம் சகிதம் குறித்த துறையில் 06 வருடகால திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) சேவை வகுதியில் 1ஆம் தர தொழில்நுட்ப உதவியாளர் பதவியொன்றில் 05 வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

iv. **வயது:**

- 22 - 45 வயதுக்கிடையில் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

v. **பதவிக்குரித்தான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்:**

- JM 1-1 2025: 72,650-10x1,350-18x2,040-122,970 சம்பள அளவில் 2026ஆம் வருடத்திற்கு இயைபான ஆரம்ப சம்பளம் + தொழில்சார் கொடுப்பனவுகள் + வாழ்க்கைச் செலவுப் படி + ஊக்குவிப்புக் கொடுப்பனவு + வருகைக் கொடுப்பனவு + மேலதிக நேரக் கொடுப்பனவு

**04. தொழில்நுட்ப உதவியாளர் பதவி - வெற்றிட எண்ணிக்கை 01**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்:**

i. **கல்வித் தகைமைகள்**

- கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ், ஆங்கில மொழி, கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்
- கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர் தரப்) பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் அனைத்துப் பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சைத் தவிர) சித்திபெற்று மூன்றாம் நிலைக் கல்வி கற்கை நெறியொன்றைக் கற்பதற்குத் தேவையான சாதனை நிலையைப் பெற்றிருத்தல்.

ii. **தொழில்நுட்ப திறன் / தேர்ச்சி**

- முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) பதவிக்கு தமக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைக்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வகையில் தொழிற் திறனில் (N.V.Q) 05ஆம் நிலைக்குக் குறையாத மோட்டார் வாகன திருத்தவேலை, பொறிமுறையாளர், மோட்டார் வாகன மின்னியலாளர் மற்றும் வளிச்சீராக்கம் செய்தல், நிறப்பூச்சு பூசுனர், தகர வேலையாளர், பட்டறை வேலையாளர் எனும் துறைகளுக்கு இயைபான தொழில்நுட்பக் கற்கை நெறியொன்றைக் கற்று தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

iii. **வயது:**

- 18 - 35 வயதுக்கிடையில் இருக்க வேண்டும்.

iv. **பதவிக்குரித்தான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்:**

- MA 2-2-2025: 50,540-10x540-7x630-4x1,080-20 x 1,280-90,270 சம்பள அளவில் 2026ஆம் வருடத்திற்கு இயைபான ஆரம்ப சம்பளம் + வாழ்க்கைச் செலவுப் படி + ஊக்குவிப்புக் கொடுப்பனவு + வருகைக் கொடுப்பனவு + மேலதிக நேரக் கொடுப்பனவு

**05. பொறிமுறையாளர் (Mechanic) பதவி - 01 வெற்றிடம் - தகரவேலையாளர் - 01 வெற்றிடம், நிறப்பூச்சு பூசுநர் - 01 வெற்றிடம் - உருக்கியொட்டுநர் பதவி - 01 வெற்றிடம்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்:**

i. **கல்வித் தகைமைகள்**

- கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதரண தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் 02 சித்தியடைந்திருக்க வேண்டும்.

ii. **தொழில்நுட்ப திறன் / தேர்ச்சி**

- ஒவ்வொரு பதவியின் கடமைக்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழிற்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் திறனில் (N.V.Q) 04ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் குறித்த துறையில் ஒரு வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

iii. **உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்:**

- கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதரண தரப்) பரீட்சையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் சித்திபெற்ற குறித்த துறையில் 05 வருடகால அனுபவத்துடன் அரச தொழில்நுட்பப் பாடசாலையொன்றினால் நடாத்தப்படும் பதவிக்குரித்தான கடமைக்கு இயைபாக 4ஆம் மட்டத்திற்குக் குறையாத தொழில்சார் தொழில்நுட்பத் திறன் / தேர்ச்சிப் பரீட்சையில் சித்தி பெற்ற ஆரம்ப தேர்ச்சியற்ற சேவை வகுதியிலுள்ள ஊழியர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதி பெறுவர்.

iv. **வயது:**

- 18 - 45 வயதுக்கிடையில் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

v. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்:**

- PL-03-2025: 43,280-10x490-10x540-10x590-12x630-67,040 சம்பள அளவில் 2026ஆம் வருடத்திற்கு இயைபான ஆரம்ப சம்பளம் + வாழ்க்கைச் செலவுப் படி + ஊக்குவிப்புக் கொடுப்பனவு + வருகைக் கொடுப்பனவு + மேலதிக நேரக் கொடுப்பனவு

**06. "கனரக இயந்திர இயக்குநர் பதவி - 05 வெற்றிடங்கள் (எக்ஸ்கவேட்டர், டோசர், பெக்கோ லோடர், வீதி அழுத்திகள்)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்:**

i. **கல்வித் தகைமைகள்**

- கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதரண தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் 02 சித்தியடைந்திருக்க வேண்டும்.

ii. **தொழில்நுட்ப திறன் / தேர்ச்சி**

- நிர்மாண இயந்திரங்களை இயக்குதல் தொடர்பில் தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபையினால் அல்லது நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறன் (04) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் குறித்த சான்றிதழைப் பெற்றுக்கொண்டதன் பின் குறைந்தபட்சம் குறித்த துறையில் மூன்று (03) வருடகால அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

iii. **உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்:**

- கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதரண தரப்) பரீட்சையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் சித்திபெற்ற குறித்த துறையில் 05 வருடகால அனுபவத்துடன் அரச தொழில்நுட்பப் பாடசாலையொன்றினால் நடாத்தப்படும் பதவிக்குரித்தான கடமைக்கு இயைபாக 4ஆம் மட்டத்திற்குக் குறையாத தொழில்சார் தொழில்நுட்பத் திறன் / தேர்ச்சிப் பரீட்சையில் சித்தி பெற்ற ஆரம்ப தேர்ச்சியற்ற சேவை வகுதியிலுள்ள ஊழியர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதி பெறுவர்.

iv. **வயது:**

- 18 - 45 வயதுக்கிடையில் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

v. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்:**

- PL-03-2025: 43,280-10x490-10x540-10x590-12x630-67,040 சம்பள அளவில் 2026ஆம் வருடத்திற்கு இயைபான ஆரம்ப சம்பளம் + வாழ்க்கைச் செலவுப் படி + ஊக்குவிப்புக் கொடுப்பனவு + வருகைக் கொடுப்பனவு + மேலதிக நேரக் கொடுப்பனவு

**07. கனரக வாகன சாரதி பதவி - 05 வெற்றிடங்கள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்:**

i. **கல்வித் தகைமைகள்**

- கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதரண தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் 02 சித்தியடைந்திருக்க வேண்டும்.

ii. **தொழில்நுட்ப திறன் / தேர்ச்சி**

- மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட A தொகுதி மோட்டார் வாகனங்களைச் செலுத்தும் உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் குறைந்தபட்சம் மூன்று (03) வருட காலம் குறித்த துறையில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

iii. **உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்:**

- கனரக வாகன சாரதி பதவிக்கு மேற்கூறிய கல்வி, தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் சகிதம் ஆரம்ப தேர்ச்சியற்ற சேவை வகுதியில் சேவையாற்றுபவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

iv. **வயது:**

- 18 - 45 வயதுக்கிடையில் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

v. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்:**

- PL-03-2025: 43,280-10x490-10x540-10x590-12x630-67,040 சம்பள அளவில் 2026ஆம் வருடத்திற்கு இயைபான ஆரம்ப சம்பளம் + வாழ்க்கைச் செலவுப் படி + ஊக்குவிப்புக் கொடுப்பனவு + வருகைக் கொடுப்பனவு + மேலதிக நேரக் கொடுப்பனவு

**➢ பதவி / பதவிகளுக்கான விசேடத்துவ ஏனைய தகைகைகள்**

i. இலங்கைப் பிரஜையாகவிருக்க வேண்டும். பதவிக்காக ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு, நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

ii. நன்னடத்தையுடைவராக இருக்க வேண்டும்.

iii. வெளிவாரி விண்ணப்பதாரிகள் மூன்று (03) வருடகால தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவர் என்பதுடன் உள்வாரி விண்ணப்பதாரிகள் 01 வருட காலம் வேலைபார்க்கும் காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.

**➢ பதவி / பதவிகளின் தன்மை**

சகல ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்வர்.

இந்தப் பதவிகளுக்காக நியமித்தல் அல்லது நியமிக்காது விடுதல் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை வடமேல் மாகாண இயந்திரோபகரண அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

உங்களால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2026-06-04ஆம் திகதிக்கு முன் ''முகாமைத்துவப் பணிப்பாளர், இயந்திரோபகரண அதிகார சபை, 95, தெற்கு சுற்றுவட்ட வீதி, குருநாகல்'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**முகாமைத்துவப் பணிப்பாளர்,**
**வடமேல் இயந்திரோபகரண அதிகார சபை.**
**தொலைபேசி இலக்கம்: 037-2222538**